LIBRARY
29 JUN 2011
Eastern University, Sri Lanka

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு பகுதி – III
– 2009/2010 (நவெம்பர்/டிசம்பர் - 2010)

# OCC 4103 தமிழில் காவியங்கள்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

01. தண்டியலங்காரம் கூறும் காவிய இலக்கணங்கள் பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிடுவதோடு அவ்விலக்கணத்தின் அடிப்படையில் தமிழ்க் காவியங்களை அணுகுவதிலுள்ள சிக்கல்கள் பற்றியும் ஆராய்க.

02. இளங்கோவடிகள் சிலப்பதிகாரம் பாடியதற்காகக் கூறப்படும் நோக்கங்கள் பற்றி உதாரணங்களுடன் விளக்கி அந்நோக்கங்கள் இன்று மறுமதிப்பீட்டிற்குள்ளாகியிருப்பது குறித்து பரிசீலிக்குக.

03. மணிமேகலையில் பௌத்த சமயக்கருத்துக்கள் இடம் பெற்றிருக்குமாற்றினை ஆதாரங்களுடன் எடுத்துக்காட்டுக.

04. கம்பராமாயணக் கட்டமைப்புத் திறனின் சிறப்புகள் பற்றி விளக்குக.

05. சோழர் காலத்தில் காவியங்கள் அதிகம் எழுந்தமைக்கும் பின்னர் ஒடுங்குதசையேற்பட்டமைக்குமான காரணங்கள் யாவை? ஆராய்க.

06. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு விளக்கக் குறிப்பு எழுதுக.

(i) சிறுகாவியங்களுள் ஒன்று பற்றி ஒரு கண்ணோட்டம்
(ii) காவிய இலக்கண நோக்கில் பெரிய புராணம்
(iii) சிலப்பதிகாரம் அல்லது சீவகசிந்தாமணியில் சமணசமயச் செல்வாக்கு
(iv) மறைந்துபோன தமிழ்க் காவியமான 'அமிர்தபதி'

(4 x 25 = 100 புள்ளிகள்)

***********